1970 மார்ச் 13]

திரு. கே. போஜன் : தற்சமயம் மின்சார வாரியம் நிர்வகித்து வரும் கிராமப் பகுதிகளில் உள்ள சாலைகளிலும், வீதிகளிலும் உள்ள விளக்குகள் அடிக்கடி கெட்டுப் போகின்றன. காரணம், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கும் பல்புகள் நல்ல தரம் உள்ளவைகள் அல்ல என்று கூறப்படுகிறது. ஆதலால் நம்முடைய அரசாங்கம் தனியாக மின்சாரத் துறையில் பல்புகள் உற்பத்தி செய்யும் பாக்டரி ஒன்றை நிறுவி, அதன் மூலம் நல்ல தரமான பல்புகளை உற்பத்தி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸ்குரூ பல்புகள் கிடைக்கவில்லை என்பதுதான் இதற்குக் காரணம். அந்த பல்புகள் இப்பொழுது பங்களூரில் செய்கிறார்கள். அதை இங்கேயே செய்ய வேண்டும் என்று ஒரு முயற்சி எடுத்து, மின்சார வாரியத்தின் மூலம் இதற்கான ஆராய்ச்சி நடத்தப்பட்டது. மின்சார வாரியத்திற்குத் தேவையான ஒரு லட்சம் பல்புகள் உற்பத்தி செய்வதற்கு மட்டும் ஒரு தொழிற்சாலையை நடத்த முடியாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே, மேற்கு வங்காளத்தில் கல்கத்தாவிலுள்ள தொழிற்சாலையின் ஒரு பகுதியாக இங்கே ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினால், அவர்களை பல்புகள் உற்பத்தி செய்யக்கூடிய முயற்சியை எடுக்கச் சொல்லலாம் என்ற எண்ணம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்துக்கு சாலை வசதிகள்

* 358 வினா—**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதை வசதியே இல்லாத இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்தில், பாதை வசதி செய்யும் பொருட்டு, சுமார் 18 லட்ச ரூபாய்க்கு (Master Plan(சிறப்புத் திட்டம் தீட்டி, சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(இ) அத் திட்டத்தை மத்திய அரசு உதவியோடு செயல் படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாலைகள் இளையாங்குடி ஒன்றியத்திலுள்ள சாலைகள் உள்ளிட்ட மேம்பாட்டிற்கென 1967-ல் நெடுஞ்சாலைத்துறைத் தலைமைப் பொறியாளர் ரூ. 1 கோடி செலவில் ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினார். செலவு அதிகமானதாலும் நிதி பற்றாக்குறை காரணமாகவும் மேற்படி திட்டம் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் படவில்லை. ஆனால் நிதிநிலையைப் பொறுத்தும் பல்வேறு திட்டங்களின் முதன்மையையும் தராதா அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டும் மேற்படி பகுதி மக்களின் தேவைகள் பரிசீலிக்கப்பட்டு அவ்வப்போது அரசு ஒப்பளிக்கும் திட்டங்களில் சேர்க்க அரசு வகை செய்யும்.